மே 2022 -ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of May 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித.எண். 12000 / ப.க5(1)/ 2022-1, நாள்.17.05.2022**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: பள்ளிக் கல்வி - 2020-2021 ஆம் கல்வியாண்டில் 35 ஊராட்சி ஒன்றிய /நகராட்சி/ மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாகவும், மற்றும் சேலம் மாவட்டம் சாணாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாகவும் மற்றும் 40 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி உயர் நிலைப்பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டது- - இப்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்தம் 476 தற்காலிக பணியிடங்களுக்கு மே-2022 ஆம் மாதத்திற்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization ) வழங்கக் கோருதல் - சார்பு

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.10, பள்ளிக் கல்வி (அகஇ-1) த் துறை நாள். 18.01.2021.
2. அரசாணை (நிலை) எண்.11, பள்ளிக் கல்வி (பக2(1) த் துறை, நாள். 18.01.2021.
3. அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக் கல்வி (அகஇ1)த் துறை, நாள்.18.02.2021.
4. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண் 00521/எல்/ இ3/ 2022, நாள் 10.05.2022.

*****

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 2020-2021-ஆம் கல்வியாண்டில் 35 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி/ மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், அவ்வாறு தரம்

உயர்த்தப்படும் 35 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை 35 உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக (ஊதிய நிலை-18, ரூ.36900-116600) நிலை உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், 2020-2021-ஆம் கல்வியாண்டில் 40 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தியும், அவ்வாறு தரம் உயர்த்தப்படும் 40 அரசு/ நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் (ஊதிய நிலை-18, ரூ.36900-116600) என்ற ஊதிய நிலையில் உள்ள உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை, ரூ.56,900-1,80,500 என்ற ஊதிய நிலையில் 40 மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.36,900-1,16,600 என்ற ஊதிய நிலையில் 9 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல்) வீதம் 40 பள்ளிகளுக்கு 360 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், மற்றும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.36,900-1,16,600 என்ற ஊதிய நிலையில் ஒரு கணினி பயிற்றுநர் (நிலை-1) பணியிடம் வீதம், 40 கணினி பயிற்றுநர் (நிலை-1) பணியிடங்கள் ஆக மொத்தம் 400 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், 2020-2021-ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் ஒன்றியம், சாணாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தியும், அவ்வாறு தரம் உயர்த்தப்படும் ஒரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்தினை உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடமாக ரூ.36,900-1,16,600 (ஊதிய நிலை-18) என்ற ஊதிய நிலையில் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடமாக நிலையுயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

4, பார்வை ஒன்று முதல் மூன்று வரை உள்ள அரசாணைகளின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட 476 தற்காலிக பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு முடிவடைந்த நிலையில் இப்பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்குறிப்பிட்டுள்ள 476 தற்காலிகப் பணியிடங்களுக்கு 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், பார்வை ஒன்று முதல் மூன்று வரை உள்ள அரசாணைகளின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட 476 தற்காலிக பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான மே-2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

17.5.22

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக

17.5.22

**நகல்**

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி(கல்வி-II)துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இவ்வலுவலக ந.க.எண்.00521/எம்/இ3/2022 நாள் 19.5.2022

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

19.5.22

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.

19/5/2022